**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**A031 தமிழக வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மேவார் என்ற சொல்லின் பொருள் யாது?
2. எந்த ஆற்றின் குறுக்கே பாண்டியன் அணை கட்டப்பட்டுள்ளது?
3. உமணர் என்ற சொல் யாரைக் குறிப்பிடுகிறது?
4. ஆயக்கணக்கோர் என்போர் யார்?
5. களப்பிரர்களை எவ்வாறு அழைத்தனர்?
6. மகா பல்லவர்கள் என்று யாரை குறிப்பிடுகின்றனர்?
7. சுங்கம் தவிர்த்த சோழன் யார்?
8. புத்தமித்திரர் எழுதிய இலக்கண நூல் எது?
9. வாசப் எந்நாட்டைச் சார்ந்தவர்?
10. முபாரக்ஷாவின் படைத்தளபதி யார்?
11. நாயக்கர் கால ஆட்சியில் சிற்றூரில் வரி வாங்கியவர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
12. இந்தியாவிற்கு முதலில் வந்த ஐரோப்பியர் யார்?
13. பெங்களூரைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் யார்?
14. வைக்கம்வீரர் என்று அழைக்கப்படுபவரைக் குறிப்பிடுக?

15. மதுரையில் எந்த ஆண்டு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பழங்கற்காலம் என்றால் என்ன?
2. சங்க மன்னர்களின் மாலைகள் குறித்து எழுதுக?
3. பல்லவர் கால ஓவியக்கலையை விளக்குக?
4. விக்கிரமசோழன் குறித்து சிறு குறிப்பு வரைக?
5. வாசப் என்பவர் யார்? விளக்குக?
6. இசுலாமியர் ஆட்சியின் வீழ்ச்சி குறித்தெழுதுக?
7. நாயக்கர் கால திருவிழாக்கள் பற்றி விவரிக்க.
8. கருணீகர்கள் பற்றிய செய்திகளைக் கூறுக?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ.) தமிழக வரலாற்றினை அறிய உதவும் தொல்பொருள் சான்றுகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ.) இலக்கியங்களின் வழி அறியலாகும் பண்டைத்தமிழரின் அயலகத் தொடர்புகள் குறித்து கட்டுரை வரைக.

2. (அ.) பல்லவர் காலத்தை அறிய உதவும் வரலாற்றுச் சான்றுகளை விவரி

(அல்லது)

(ஆ.) சோழர்களின் நிர்வாக முறையை தொகுத்துரைக்க.

3. (அ.) பிற்காலப்பாண்டியரின் அறப்பணிகள் குறித்து கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ.) மராட்டியரின் ஆட்சிமுறையை விளக்கி வரைக.

*** 